Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

பொது நூலகம், மாநகராட்சி மன்று, யாழ்ப்பாணம் 30-5-1993

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 18 | [31-05-93] | திங்கட்கிழமை | ஓசை 102

## இராணுவ நடவடிக்கையால் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டன

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ். மாவட்டத்தில் 12 அரசினர் வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவின் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. யாழ். சுகாதார அத்தியட்சகர் பிரிவில் 75 அரசினர் வைத்தியசாலைகள் கடந்த 1990ஆம் ஆண்டுவரை இயங்கிவந்தன. ஆனால் கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டதுடன் இரண்டு வைத்தியசாலைகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டும் மூன்று வைத்தியசாலைகள் எதுவித தொடர்பும் அற்ற நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, காரைநகர், பூநகரி, பண்டத்தரிப்பு, வேலணை, மண்டைதீவு, ஆனையிறவு, காங்கேசன்துறை. [4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

# அரசாங்கம் புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு

## ஜூன் 13-ந் திகதி உண்ணாவிரதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிங்களப் பொலிசார் 38பேரும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வட்டாரங்களில் இருநது அறியவருகின்றது. தாம் சிறை பிடிக்கப்பட்டு எதிர்வரும் யூன் மாதம் 13ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் முடிவடைகின்றபோதும் அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல், கடைப்பிடித்துவரும் அசமந்தப்போக்கைக் கண்டித்தே இவ் உண்ணா விரதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டதாகவும் தெரியவருகின்றது.

இரண்டாம் கட்டஈழப்போர் 1990 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிககப்பட்ட வேளை மேலே குறிப்பிட்ட 38 பொலிசாரும் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக பிடிக்கப்பட்டதும், காவலிலுள்ள இராணுவச் சிப்பாய் 1991இல் இடம் பெற்ற ஆனையிறவுச் சமரின் போது யுத்தக் கைதியாகப் பிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இப் போர் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் பல தடவை தமது நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டியிருந்தனர். அத்தோடு, யாழ். குடாநாட்டிற்கு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு வந்த பௌத்த பிக்குகள், அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ணான்டோ ஆகியோரிடமும் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை வற்புறுத்தியிருந்தனர். நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் நோக்கில் இரு பொலிசாரையும் விடுதலை செய்தனர்.

ஆனால் சமாதானத் தூதுக் குழுக்களின் முயற்சிகள் பயனளிக்கவில்லை. யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி விஜயதுங்கா தூதுவர்களை சந்திப்பார்

[கொழும்பு]

கொழும்பில் இருக்கும் சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பின் போது அவர் அரசாங்கத்தின் தற்போதைய நிலை, மற்றும் கொள்கைகள் என்பன தொடர்பாக விளக்க இருப்பதுடன் மதிய விருந்தும் அளிக்கவுள்ளார். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் டி. பி. விஜயதுங்கா வெளிநாட்டுத் தூதுவர்களை சந்திக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மலையக இளைஞர் கைது நிறுத்தப்பட வேண்டும்

சென்னன் கோரிக்கை

[கொழும்பு]

கொழும்பில் தங்கி வேலை பார்க்கும் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர்களை பொலிசார் சந்தேகத்தின் பெயரில் அடிக்கடி கைது செய்யும் நிகழ்ச்சிகளை நிறுத்த வேண்டும் என்று பதுளை மாவட்ட எம். பியும், இ. தொ. கா. துணைச் செயலருமான டி. வி. சென்னன் பொலிஸ் மா அதிபரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அநாவசியமான இக் கைதுகள் மூலம் மலையகத்தில் அமைதியற்ற சூழ்நிலை தோன்றலாம் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

## லலித் கொலை விசாரணை புதிய திருப்பமாக்

## ஹெலியில் உலாவு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு நேற்று முதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைப்புற கிராமங்களில் துரித சிங்கள குடியேற்றம்

[கொழும்பு]

மகாவலி பி வலயத்தில் துரித குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மகாவலித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கென 3200 விவசாயக் குடும்பங்கள் இவ்வருட டிசம்பர் மாதத்திற்குள் குடியேற்றப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி பி வலயத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளமை தெரிந்ததே.

புதிதாக குடியேற்றப்படவுள்ளவர்கள் பேருவளை, திஸ்ஸமாரகம, பொலநறுவை, மகியங்கனை. கல்கமுவ, அத்தனகலை, கேகாலை, ஆகிய இடங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## அமைதி ஏற்படுத்தாவிட்டால்

## பேச்சுவார்த்தை மூலமே

தச் சந்திப்பின் போது அவர் அரசாங்கத்தின் தற்போதைய நிலை, மற்றும் கொள்கைகள்

டுத் தூதுவர்களை சந்திக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மலையக இளைஞர் கைது நிறுத்தப்பட வேண்டும்

### சென்னன் கோரிக்கை

[கொழும்பு]

கொழும்பில் தங்கி வேலை பார்க்கும் மலையகத்தைச் சேர்ந்த இளைஞர்களை பொலிசார் சந்தேகத்தின் பெயரில் அடிக்கடி கைது செய்யும் நிகழ்ச்சிகளை நிறுத்த வேண்டும் என்று பதுளை மாவட்ட எம். பியும், இ. தொ. கா. துணைச் செயலருமான டி. வி. சென்னன் பொலிஸ் மா அதிபரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அநாவசியமான இக் கைதுகள் மூலம் மலையகத்தில் அமைதியற்ற சூழ்நிலை தோன்றலாம் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

## லலித் கொலை விசாரணை புதிய திருப்பமாம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் மரணம் தொடர்பான விசாரணையில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

முகலன் வீதிக்கருகே சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட ரகுநாதனே லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு காரணமானவர் என்று நீதிமன்றம் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறதாம். இதனைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வு பணியகத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்தத்தை காப்பாற்ற அரசு திடசங்கற்பம்

### டி. பி. விஜயதுங்கா தெரிவிப்பு

பௌத்தத்தை பாதுகாக்கவும், மகாசங்கத்தினரைக் காக்கவும் தமது அரசு திடசங்கற்பத்துடன் பாடுபடும் என ஜனாதிபதி விஜயதுங்கா தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் மாலைசர்வதேசபௌத்தவிருந்தினர் விடுதிக் கட்டடவேலைகளை ஆரம்பித்து வைத்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

குப் எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வட்டாரங்களில் இருநது அறியவருகின்றது. தாம் சிறை பிடிக்கப்பட்டு எதிர்வரும் யூன் மாதம் 13ஆம் திகதியுடன் மூன்று வருடங்கள் முடிவடைகின்றபோதும் அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல், கடைப்பிடித்துவரும் அசமந்தப்போக்கைக் கண்டித்தே இவ் உண்ணா விரதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டதாகவும் தெரியவருகின்றது.

இரண்டாம் கட்டஈழப்போர் 1990 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிககப்பட்ட வேளை மேலே குறிப்பிட்ட 38 பொலிசாரும் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக பிடிக்கப்பட்டதும், காவலிலுள்ள இராணுவச் சிப்பாய் 1991இல் இடம் பெற்ற ஆனையிறவுச் சமரின் போது யுத்தக் கைதியாகப் பிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இப் போர் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் பல தடவை தமது நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டியிருந்தனர். அத்தோடு, யாழ். குடாநாட்டிற்கு நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு வந்த பௌத்த பிக்குகள், அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ணான்டோ ஆகியோரிடமும் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை வற்புறுத்தியிருந்தனர். நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் நோக்கில் இரு பொலிசாரையும் விடுதலை செய்தனர்.

ஆனால் சமாதானத் தூதுக் குழுக்களின் முயற்சிகள் பயனளிக்கவில்லை. யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு எவ்வாறாயினும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணவேண்டும். இல்லாவிட்டால் என்றுமே பிரச்சினையை தீர்த்துவைக்கக்கூடியதாக இருக்கும் என நான் நினைக்கவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மங்கள முனசிங்காவின் தெரிவுக்குழுவிலும் பலவித யோசனைகள் ஆராயப்பட்டன. புதிய யோசனைகள் முன்வைக்கப்படவேண்டும் என்பதல்ல இப்போதுள்ள விவகாரம்; ஏற்கனவே முன்வைக்கப்பட்ட யோசனைகளில் சகலருக்கும் ஏற்புடையதான யோசனைகள் குறித்து இணக்கப்பாட்டிற்கு வருவதே அவசியமானதாகும் என்றும் பிரதமர் அப்பேட்டியில் கூறினார்.

அரசியல் திட்டத்தை முன்வைக்க அமைதியான சூழ்நிலை தோன்றவேண்டியது அவசியமானது. தீவிரவாதிகளை நிராயுதபாணிகளாக்கும் தேவையும் உள்ளது. அதிகாரப்பரவலாக்கலை அதிகரிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் ஆனால் அதிகாரப்பரவலாக்கல் அலகு தொடர்பாகவே இணக்கம் ஒன்றிற்கு இன்னும் வரமுடியாது உள்ளது. இது ஒரு பிரதான விவகாரமாகும் ஏனைய விவகாரங்களில் இணக்கம் சாத்தியமாக உள்ளது. எனினும் அதிகாரப்பரவலாக்கல தொடர்பாக ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இணக்கததிற்கு இன்னும்

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

தென்மாகாணத்தில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில்பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு நேற்று முதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைப்புற கிராமங்களில் துரித சிங்கள குடியேற்றம்

[கொழும்பு]

மகாவலி பி வலயத்தில் துரித குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மகாவலித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கென 3200 விவசாயக் குடும்பங்கள் இவ்வருட டிசம்பர் மாதத்திற்குள் குடியேற்றப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி பி வலயத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளமை தெரிந்ததே.

புதிதாக குடியேற்றப்படவுள்ளவர்கள் பேருவளை, திஸ்ஸமாரகம, பொலநறுவை, மகியங்கனை. கல்கமுவ, அத்தனகலை, கேகாலை, ஆகிய இடங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## அமைதி ஏற்படுத்தாவிட்டால் பாரிய விளைவு உண்டாகும்

### கண்டி ஆயர் தெரிவிப்பு

(கண்டி)

நாட்டுமக்கள் அனைவரும் நிம்மதியாகவும் அமைதியாகவும்வாழக்கூடிய ஒரு நிலையை சிறிலங்காவின் புதிய அரசு ஏற்படுத்தத் தவறினால் அது பல பாதகமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என கண்டி ஆயர் வியான் பெனான்டோ தெரிவித்துள்ளார்.

கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற மத வழிபாட்டில் சிறிலங்காவின்புதியஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்கா பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்காஆகியோர்கலந்துகொண்டனர்.

இம்மத வழிபாட்டின் முடிவில் ஆயர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் உரையாடும் போதே மேற்கண்டவாறு தனது கருத்தைத் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது.

இச்சந்திப்பின்போது சிறிலங்காவில் வாழும் அனைத்து இனமக்களும் புதிய அரசாங்கத்திடம் பாரியமாறுதல்களை எதிர்பார்க்கிறார்கள்.

அவர்கள் இதுவரை தாம் அனுபவித்து வந்த துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு நிம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ரெலோ - பொலிசார் மன்னாரில் மோதல்

## இராணுவம் அப்பகுதிக்கு விரைவு

(மன்னார்)

மன்னாரில்சிறிலங்கா பொலிசாருக்கும் ரெலோ குழுவிற்கும் இடையில்மோதல் உருவாகும் நிலை தோன்றியுள்ளது. இதையடுத்து இப் பகுதிக்கு இராணுவம் விரைந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது ரெலோ குழுவினர் பஸ்ஸில் வந்துகொண்டிருந்தபோது பொலிஸ் சோதனை நிலையத்தில் பஸ் நிறுத்தப்பட்டு அதில் வந்த இக் குழுவினர் சோதனையிடப்பட்டனர். இதை ரெலோ குழுவினர் கடுமையாக ஆட்சேபித்தனர். இதனால் பொலிசாருக்கும்

(4ஆம் பக்கம்,பார்க்க)

## தொழிற்சாலை ஊழியர் 100 பெண்களுக்கு மயக்கம்

[கொழும்பு]

கொழும்பு தெமட்டகொட இரசாயன ஆலையில் வேலை பார்க்கும் பெண்களில் சுமார் நூறு பேருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டதாக பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இரசாயனங்களை உற்பத்தி செய்யும் வேலைபார்க்கும பெண்கள் நேற்று முன்தினமிரவு திடீரென மயக்கமுற்றதாகவும், அதனைத் தொடர்ந்து அவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'O' குறூப் இரத்தம் அவசரமாகத் தேவைப்படுகிறது.

'O' குறூப் இரத்தமுள்ளவர்கள் தம்முடன் உடன் தொடர்புகொள்ளுமாறு சஞ்சீவி அமைப்பின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று கேட்டுக்கொளகின்றது.

# ஆளும் கட்சி தீர்வை முன்வைக்க வேண்டும்

## கட்சி உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனையை ஆளுங் கட்சியே முதலில் முன்வைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் வலியுறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி யோசனையொன்றை முன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபையிடம் அதிகாரம் எதுவுமில்லை

## பத்திரிகையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்கவெனவும் பிரதேச ஜனநாயகத்தை விரிவுபடுத்தவும் எனக் கூறி அமைக்கப்பட்ட மாகாணசபை தனது நோக்கத்தை பூர்த்தி செய்யவில்லை என பத்திரிகையாளர் வினிஎத்திகொட தெரிவித்தார்

மேலும் அவர் கூறுகையில்; எதிர்க்கட்சியின் கையில் மாகாணசபை ஆட்சியொன்று கிட்டியபின்னர்தான் இதன் அதிகாரம் பற்றி யாவரும் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது என்றார்.

மேலும் இதுவரை காலமும் மத்திய அரசாங்கத்தில் உள்ள

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தேசிய சனத் தொகை கொள்கை வகுக்கப்படுமாம்

(கொழும்பு)

தேசிய சனத்தொகை கொள்கை ஒன்று விரைவில் வகுக்கப்பட இருப்பதாக கொழும்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டின் சனத்தொகையை ஒரு ஸ்திரத் தன்மைக்குள் கொண்டு வருலாம் என்றும், ஒரு குடும்பத்திற்கு இரண்டு பிள்ளைகள் என்ற விகிதத்தில் பிறப்பு வீதத்தை மட்டுப்படுத்துவதனூடாக இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இக் குறிக்கோளை அடைய முடியுமென்றும் கூறப்பட்டுள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### EXODUS

தாயகம் நோக்கிய பயணம் எழுகியது லியோன் யூரிஸ் (EXODUS By LEON URIS) தமிழாக்கம் இரண்டு பாகங்கள் விலை ரூபா 400/-. வெளியீடு: ஈழநாதம் கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

(சி-6717)

### நுளம்பு விரட்டி

நுளம்பை விரட்டிட "நீம்" தூபம். கமழ்வது நறுமணம். அகல்வது நுளம்பு. பெறுவது நித்திரை இன்பம் நோயற்ற சுகவாழ்வு. பக்கற் விலை ரூ 3/25 பக்கற் கொண்ட காட் ஒன்று ரூ 60/- அண்ணா கோப்பிக்கடைகளிலும் பெறலாம். — "மில்க்வைற்"

(சி-6705)

### விற்பனைக்கு

பலசரக்கு கடைகளுக்கேற்ற பாவித்த தளபாடங்கள் (அலுமாரிகள், சோகேஸ் றாக்கைகள், பட்டடைகள் மேசை) விற்பனைக்குஉண்டு தொடர்பு செ. கோபாலகிருஷ்ணன். இரும்புத் தொழிறசாலை, சங்கானை. (4954)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள். றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

### விற்பனைக்கு

நல நிலையில் உள்ள Sansui Integrated Amplifier (Au 317) 4 Speakers போடக் கூடியது விற்பனைக்குண்டு. ஒலிப்பதிவுக் கூடங்களுக்கு ஏற்றது டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6714)

### சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சிப் பகுதியில் சைக்கிள் கள்வர் நடமாட்டம் அதிகரித்துள்ளது

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் விடப்பட்ட கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த செ. ஜெகநாதன் என்பவருடைய புதிய ஈஸ்ரன் சைக்...

## அறிவித்தல்

இன்று [ 31 - 05 - 93 ] திங்கள் தொடக்கம்....

இருபதைந்து வருடங்களுக்கு மேல் நகை விற்பனை நிலையத்தில் பணியாற்றி அனுபவமுள்ள நான் இன்று 31-05-93 காலை 11.55 தொடக்கம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 190/6 இலக்க அறையில்

பவளகேசரி நகை மாளிகை

என்னும் புதிய வியாபாரநிலையத்தை ஆரம்பிக்கின்றேன் என்பதை அன்புடன் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**பவளகேசரி நகைமாளிகை**
190/6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் :
பவளகேசரி
[பவளம்]
நீர்வேலி

(4989)

## 31-ம் நாள் நினைவு கூரல்



மலர்வு: 06 — 11 — 1917

உதிர்வு: 30 — 04 — 1993

அமரர் **கயிலாயபிள்ளை நவரத்தினம்**
(பலாலி)

பேருடன் புகழ் சேர்த்துப்
பெருவாழ்வு வாழ்ந்திருந்தீர்
ஊரும் உலகும் போற்ற
ஒரு மகனைப் பெற்றெடுத்தீர் — ஐயா
யாரும் அறியா வண்ணம்
அரனடியைச் சேர்ந்துவிட்டீர் — எம்மை
வாரும் என அழைக்கும் வரை
வழித்துணையே விழிநீரோ ?
சேரும் வகை தெரியாமல் — நாம்
சேர்ந்தே அழுகின்றோம்
ஈரம் கொள் கண்ணுடனும் துயர்ப்
பாரத்து நெஞ்சுடனும் — இறையடி
ஆராதித்தே நிற்கின்றோம்
ஆத்மசாந்தி வேண்டி வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, மகன்
பெறாமக்கள், பேரன்மார்.

(சி-6715)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

## கிராமசேவை அலுவலர் விசேடதரத்திற்கு பரீட்சை

(கொழும்பு)

கிராமசேவகர் உத்தியோகத்தர்களுக்கான விசேடதரம் ஒன்று (சுப்ரா) உருவாக்கப்படவுள்ளது. இத் தரத்திற்கான 80 சதவீதமான இடங்கள் பரீட்சை திணைக்களம் மூலம் நடத்தப்படும் போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். மிகுதி 20 சத வீதப்பகுதிக்கு குறைந்தது 20 வருட சேவையை திருப்திகரமாக பூர்த்தி செய்தவர்க்கும் முதலாம் தரத்தில் 5 வருடகால சேவையை பூர்த்தி செய்தவர்க்கும் ஒதுக்கப்படும்.

முதலாம் தரத்தில் 3 வருட சேவையை பூர்த்தி செய்தவர்களும் இந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றமுடியும். இந்த உத்தேச விசேட தரத்தில் 3 வருடம் திருப்திகர சேவையை பூர்த்தி செய்தவர்கள் நிர்வாக சேவை பரீட்சைகளில் தோற்ற முடியும் என பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம் இலங்கை
வெளிவாரிக் கற்கைநெறி
1991 / 92

பொதுக் கலைமாணி பகுதி 1, வர்த்தகமாணி பகுதி 1, மாணவர்களுக்கு முன்னர் நடைபெறாத பொருளியல் (ECN 2.1 Micro Economics & ECN 2.2 Micro Economics) வழிகாட்டல் வகுப்புக்கள் 4-6-93 வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தில் இடம் பெறும்.

பதிவாளர்.

(சி/6708)

**BECON**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
**A/L 95**
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம் ; 5-6-93
சனி 7-00 a. m.
வழமையான ஆசிரியர் குழு.

(சி-6693)

வெளிவந்து விட்டது
**மாற்றம்**
சஞ்சிகை: 03

[5002]

## BECON (பாரதிதாசன்)

யாழ்ப்பாணம்

**O/L DAY CLASSES**
**1993 DEC.**

❀ தனித்துவம் மிக்க ஆசிரியர் குழு.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| | | S. வாமன் |
| கணிதம் | — | J. டொனிலோஸ் |
| | | இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வி | — | கே. எஸ். முத்துலிங்கம் |
| தமிழ் | — | கோப்பாய் சிவம் |
| ஆங்கிலம் | — | P. தவராசா |
| வர்த்தகம் | — | T. ராஜன் |
| சமயம் | — | K. நாகேஸ்வரன் |

வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்.

**ஆரம்பம் 1-6-93 8-00 a. m.**

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
25-07-1949

ஆண்டவன் அடியில்
10-06-1992

திதி: 31-05-93

அமரர்
**சரவணமுத்து தங்கராசா**

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை பேணிக் காத்து. வளர்த்து, அயராது உழைத்து எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே! எம் உடல் இத்தரை மீது சாயுமட்டும் நித்தமும் உம் நினைவை சுமந்து நிற்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வேல்வீதி,
மயிலிட்டி.
தற்காலிகமுகவரி:
இணுவில் கிழக்கு.

உம் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

(4998)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-31

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்தியநாதன் (இளையதம்பி பாக்கியராசா - காரைதீவு-அம்பாறை)

திருமலை - மூதூர் தங்கநகர்ப் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தருகே வைத்துகொலை செய்யப்பட்ட,

- ❋ தீபன் (செல்வராஜா நவரட்ணராஜா (நவம்)- கிளிவெட்டி, மூதூர் - திருமலை)
- ❋ குமார் (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி, மூதூர் - திருமலை)
- ❋ மாயவன் (மகேந்திரன் மயில்வாகனன் -கிளிவெட்டி, மூதூர் - திருமலை)
- ❋ ரங்கா (விஸ்வலிங்கம் குணசேகரம் - தங்கநகர், மூதூர் - திருமலை)
- ❋ மாஸ்ரர் (மயில்வாகனம் குமாரகுலசிங்கம்-தங்கநகர். மூதூர் - திருமலை)
- ❋ ராஜு (அந்தோனிப்பிள்ளை ராஜேந்திரன் - திருமலை)
- ❋ ம. குலேந்திரன் (கிளிவெட்டி, மூதூர்-திருமலை)
- ❋ பஞ்சாட்சரம் சுந்தரலிங்கம் (தங்கநகர், மூதூர் திருமலை)
- ❋ மயில்வாகனம் அமிர்தகுலசிங்கம் (தங்கநகர், மூதூர் - திருமலை)
- ❋ இராசையா தங்கன் (தங்கநகர், மூதூர்- திருமலை)
- ❋ கந்தசாமி (இராசையா கந்தசாமி - தங்கநகர்,

விற்பனைக்கு

நல நிலையில் உள்ள Sansui Integrated Amplifier (Au 317) 4 Speakers போடக்கூடியது விற்பனைக்குண்டு. ஒலிப்பதிவுக் கூடங்களுக்கு ஏற்றது டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6714)


## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சிப் பகுதியில் சைக்கிள் கள்வர் நடமாட்டம் அதிகரித்துள்ளது

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் விடப்பட்ட கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த செ. ஜெகநாதன் என்பவருடைய புதிய ஈஸ்ரன் சைக்கிள் வண்டியொன்று சென்ற புதன் கிழமை காலை களவாடப்பட்டுள்ளது. இதே வேளை அன்று காலை நாவற்காடு வரணியைச் சேர்ந்த ஆ. செந்தில்வேல் என்பவருடைய (றலி) சைக்கிள் ஒன்றும் கொடிகாமம் தேங்காய் கடைக்கு அண்மையில் விடப்பட்ட போது களவாடப்பட்டுள்ளது. இது போன்று தென்மராட்சிப் பகுதியில் தொடர்ந்து சைக்கிள்கள் களவாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (86)


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11.30 மணி முதல்
பகல் 3.00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா 25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
[சி-6718]


(பலாலி)

பேருடன் புகழ் சேர்த்துப்
பெருவாழ்வு வாழ்ந்திருந்தீர்
ஊரும் உலகும் போற்ற
ஒரு மகனைப் பெற்றெடுத்தீர் — ஐயா
யாரும் அறியா வண்ணம்
அரனடியைச் சேர்ந்துவிட்டீர் — எம்மை
வாரும் என அழைக்கும் வரை
வழித்துணையே விழிநீரோ ?
சேரும் வகை தெரியாமல் — நாம்
சேர்ந்தே அழுகின்றோம்
ஈரம் கொள் கண்ணுடனும் துயர்ப்
பாரத்து நெஞ்சுடனும் — இறையடி
ஆராதித்தே நிற்கின்றோம்
ஆத்மசாந்தி வேண்டி வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை தெற்கு, மானிப்பாய். — மனைவி, மகன் பெறாமக்கள், பேரன்மார்.

(சி-6715)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா பாக்கியம்

பிறப்பு: 194?-11-29 — இறப்பு: 1988-06-01

தமிழின விடிவின்
தனித்துவமான பாதையிலே
கால் பதித்த
கலங்கரைச் சுடரே!
தேசவிரோதிகளால் - தமிழ்
தேசத்தினின்று பிரிக்கப்பட்டாய்
ஆனாலும்
உன்னடி தொடர
உறுதுணை தந்தாய்
தொடரும் பாதையிலே
துடிக்கிறது நெஞ்சம்
எதற்கும் நாம் அஞ்சோம்
துணிந்து நிற்போம்
விடுதலை வேண்டி.

01-06-1993 செவ்வாய்க்கிழமை (நாளை) உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்களையும் எமது இல்லத்தில் நடைபெறும் இந்நினைவு தின நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். — தாய், பிள்ளைகள்.

(4959)


யாழ்ப்பாணம்

**O/L DAY CLASSES**

**1993 DEC.**

❀ தனித்துவம் மிக்க ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| | | S. வாமன் |
| கணிதம் | — | J. டொனிலோஸ் |
| | | இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வி | — | கே. எஸ். முத்துலிங்கம் |
| தமிழ் | — | கோப்பாய் சிவம் |
| ஆங்கிலம் | — | P. தவராசா |
| வர்த்தகம் | — | T. ராஜன் |
| சமயம் | — | K. நாகேஸ்வரன் |

வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்.

**ஆரம்பம் 1-6-93 8-00 a. m.**

(சி-6723)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு:
1972. 06. 25

வீரச்சாவு:
1993. 05. 01

### கப்டன் தொல்காப்பியன்

[திலீபன்] (சண்முகராசா. சோ)

மூதூரின் நன் முத்தே!
முடி சூடா நம் சொத்தே!
முத்தமிழைக் கோலோச்ச
முகிழ்ந்திட்ட பெரு
நெருப்பே!
தெருவோரம் வந்திட்ட
செந் தமிழ் மக்களை.
வாழ்வித்து வளமாக்க,
புறப்பட்டாய்- புலியானாய்
- நின்
பண்பட்ட இதயமதோ -
விழுப்
புண்பட்ட வீரர்தமை- உன்,
மடிமீது தலை வைத்தே
நோய் தீர்க்கும்
மருந்தானாய் - தமிழ்ப்
பசி தீர்க்கும் விருந்தானாய்!
மருத்துவப் பணி உன் களப்
பசியை அடக்கிற்றா?
இல்லை - இல்லை!
களமாடிக் குலம் வாழ
விரைந்திட்டே தமிழ்க்
கொற்றங் காண,
விரைந்திட்ட நீ விரைந்
திட்டாய்,
விடியலுக்காய், விளை
நிலமாய்!
தமிழுக்கு வித்தானாய்!
தமிழீழச் சொத்தானாய்!
துலங்கிற்றோ உன் வீரம்
துவண்டிடவில்லை நாம்.
தொடை தட்டிப் புறப்பட்
டோம்!
தொடர்ந்திட்டோம் - உன்
வழி நடந்திட்டோம்!
தமிழ்க்
கொற்றக் கொடி
நாட்டியாங்கே
குவலயத்தில் தமிழ்
அரசோச்சும்
புதுநாளும் ஒன்று வரும்
புதுவாழ்வும் நமக்காகும்!
தமிழ் வாழும் மட்டும்,
தமிழீழம் எங்கும் -
தொல்காப்பியா,
நின் புகழ் வாழும் ஐயா,
புகழோடு தமிழும் வாழும்.

பாரதிபுரம்,
கிளிவெட்டி, மூதூர். [5005] — குடும்பத்தினர், நண்பர்கள்.

(செல்வராஜா நவரட்ணராஜா (நவம்)- கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

❀ குமார் (சதாசிவம் திருக்குமார் - கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

❀ மாயவன் (மகேந்திரன் மயில்வாகனன் -கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

❀ ரங்கா (விஸ்வலிங்கம் குணசேகரம் - தங்கநகர், மூதூர் - திருமலை)

❀ மாஸ்ரர் (மயில்வாகனம் குமாரகுலசிங்கம்-தங்கநகர், மூதூர் - திருமலை)

❀ ராஜு (அந்தோனிப்பிள்ளை ராஜேந்திரன் - திருமலை)

❀ ம. குலேந்திரன் (கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

❀ பஞ்சாட்சரம் சுந்தரலிங்கம் (தங்கநகர், மூதூர் திருமலை)

❀ மயில்வாகனம் அமிர்தகுலசிங்கம் (தங்கநகர், மூதூர் - திருமலை)

❀ இராசையா தங்கன் (தங்கநகர், மூதூர்- திருமலை)

❀ கந்தசாமி (இராசையா கந்தசாமி - தங்கநகர், மூதூர் - திருமலை)

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட 28 தமிழர்கள்.

திருமலை - நிலா வெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தை- பெண்கள் உட்பட 09 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மாமுனையில் 2-வது நாளாக இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்-

லெப். சுலக்சன் (கணபதிப்பிள்ளை சிறிரங்கநாதன் - உடுத்துறை தெற்கு, தாளையடி- யாழ்.)

சூரி (கறுப்பையா செல்வகுமார் - உடுத்துறை தெற்கு, தாளையடி - யாழ்.)

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

ராகுலன் (குமாரசாமி குகானந்தன் - இல 96, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

திருமலை - உப்பாற்றுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் படகில் பயணம் செய்து கொண்டிருந்தோர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகளில் வவுனியா - தாண்டிக்குளம், தடைமுகாம் பகுதியில் வைத்து சிறிலங்காப்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போன பல தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

முகிலன் (பாலசிதம்பரநேசன் தேவராசா - கல்லுண்டாய் வைரவர் கோயிலடி, நவாலிதெற்கு, மானிப்பாய் - யாழ்.)

முல்லைத்தீவு 5-ம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

அறிவொளி (நாகரத்தினம் கிருபா - உருத்திரபுரம் - கிளிநொச்சி)

யாழ் - கொல்லன்கலட்டிப் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற போது சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 02 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6712)

சிந்தனைக்கு

அறிவால் பண்படுத்தப்பட்ட ஆர்வமே உறுதி
— ப்ளேய்ஸ் பேஸ்க்கல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## மிகையான கணிப்பு அச்சமூட்டும் அறிவிப்பு

யுத்தத்தின் காரணமாக பெருமளவில் மக்களின் மனோ நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் வாழ்க்கையில் பெரும் விரக்தியுற்றிருப்பதாகவும், பலர் தற்கொலை முயற்சியில் ஈடுபடலாமெனவும் சிலஎச்சரிக்கைகள் அண்மைக் காலமாக விடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு விடுக்கப்படும் எச்சரிக்கைகளின் போ வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் அதிர்ச்சி ஊட்டுபவையாகவும், மக்களுக்கு அச்சம் தருபவையாகவும் உள்ளன.

வடக்கு-கிழக்கில் பல வருடங்களாக இடம் பெற்று வரும் போர்கள் பலரது பொருளாதார வாழ்வையும், சமூக வாழ்க்கையையும் அழித்துள்ளன. இதனால், பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது தொழில் நடவடிக்கைகளையும் வருமானத்தையும் இழந்துள்ளனர்.

இதேவேளை குண்டுவீச்சுச் சத்தங்களும், விமானங்களின் இரைச்சல்களும் மக்களின் ஒரு பகுதிக்கு அச்சத்தை ஊட்டுபவையாகவுள்ளன இதனால் இராணுவ நடவடிக்கை இடம் பெறும் போது அன்றி குண்டுவீச்சுகள் இடம் பெறும் போது அவர்கள் ஓரளவிற்குப் பயத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறாக, பொருளாதாரத்தையும் இழந்து, இருப்பிடங்களையும் இழந்துள்ள மக்கள் வறுமையில் சிக்கிப் பெரும் துன்பங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக இம்மக்கள் ஒரு விதமான வேதனைக்கும் வருத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர் இதேவேளை இடம் பெயர்ந்து வறுமை போன்றவற்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மரணங்கள் சம்பவித்தும் உள்ளன.

ஆனால், இவையாவற்றையும் ஒன்றுதிரட்டி ஒட்டுமொத்தமாக மக்களின் மனோநிலை பெரியளவில் பாதிக்கப்பட்டு விட்டதென குறிப்பிடுவது எந்தளவிற்குப் பொருத்தப்பாடானதாகும்? மக்களின் பெரும் எண்ணிக்கையானோர் விரக்தியின் விளிம்பிற்குச் சென்று விடுவர் என்றும் தற்கொலை புரிந்துவிடக்கூடும் என்றும் குறிப்பிடுவது எந்தளவிற்கு யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவுள்ளது?

# நகரின் மத்தியில் நடந்த கொடூரம் தமிழர் கலை பொக்கிசம் தீக்கிரை

நான்கு புறமும் இருக்கும் விசாலமான தார் வீதிகளில் வாகனங்கள் விரைந்து செல்லும்.

சுப்பிரமணியம் பூங்காவும், மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானமும், புல்லுக் குளமும், கோட்டை முனியப்பர் கோவிலும், துரையப்பா விளையாட்டு அரங்கமும், மா நகராட்சி மன்றக் கட்டடமும் சூழ்ந்திருக்க அவற்றினிடையே நடுநாயகமாய் உயர்ந்திருந்த இரண்டு மாடிக் கட்டடம்.

ஒருபுறத்தே திறந்த வெளிக் கலையரங்கம்; மறுபுறத்தில் டென்னிஸ் மைதானமுமாக வெள்ளைத் தாமரையில் கல்வித்தாய் அமர்ந்து இருப்பாள் வீணை வாசித்தபடி.

அதனைக் கடந்து பார்வையைச் செலுத்தினால் யாழ்ப்பாண மா நகராட்சி மன்ற பொது நூல் நிலையம் என்ற பெயர் வரவேற்கும்.

வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தால் தினசரிப் பத்திரிகைகள் இருக்கும் பகுதி ஒரு புறத்திலும், நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மறு புறத்திலும், இவற்றிற்கு அப்பால் சிறுவர் பகுதியுமாக தரைத்தளம். காலை ஏழு மணிமுதல் மாலை ஏழு மணிவரை சனத்திரள் மொய்த்த வண்ணம் இருக்கும்.

மாடிப்படிகளில் ஏறி மேலே போனால் உடனுதவும் பகுதியும், கேட்போர் கூடமுமென பரந்த பிரதேசம். எங்கும் நிசப்தம் குடிகொண்டு இருக்கும். ஒரு குண்டூசி விழுவது கூட பேரோசையாய் எதிரொலிக்கக் கூடிய அளவுக்கு அங்கு நிசப்தம் நிலவும். பண்ணைக் கடலைத் தழுவிவரும் இதமான தென்றல் காற்று மேனியைத் தொட்டுத் தடவிச் சுகமளிக்க, புத்தகங்களின் இதழ்களுக்குள் முகம்புதைத்து அறிவுக் கடலின் ஆழம் தேடுவதில் முனைந்திருப்போரால் கதிரைகள் நிரம்பி வழியும்.

இப்படித்தான் யாழ்ப்பாணப் பொது நிலையத்தின் அன்றைய காட்சி இருந்தது. நினைவுத் திரையில் மின்னலாய் மேலெழுகிறது

ஆனால், இந்தக் காட்சிகள் பழங்கதையாகிப் போய் பன்னிரண்டு ஆண்டுகள் அதற்குள் பறந்தோடிப் போய்விட்டன.

நகரத்தின் மத்தியில் ஒரு பண்பாட்டுப் படுகொலை.

நாகரிக மனிதன் வெட்கித் தலைகுனிய - காக்கிச் சட்டைகளின் கோரத்தாண்டவம்.

1981 மே 31-ன் இரவு முடிந்து காலைக் கதிரவன் தன் பொற்கிரணங்களைப் பரப்பத் தொடங்கியபோது சுமார் ஒரு லட்சம் புத்தகங்களும் எரிந்து போன சாம்பலைத்தான் காற்று நாலா திசைகளிலும் காவிச் சென்றது.

யாழ்ப்பாண நகரம் மீண்டும் எரிவதாய் வானொலிச் செய்திகள் முணுமுணுத்து ஓய்ந்தன.

தமிழீழம் கேட்டு 'கூட்டணி' கண்டவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் முன்பு மண்டியிட்டு நின்ற வேளை அது.

வீராவேசப் பேச்சுகளுக்கு மூட்டை கட்டி வைத்த கூட்டணிக்காரர்கள் எல்லை போட முன்பு பெருகிவரும் சிங்களக் குடியேற்றம் என்ற வெள்ளத்தைத் தடுக்க அணை போடப் போடுவதாய், பதவிகளுக்காக போதனைகள் புரிந்து கொண்டிருந்த காலம் அது.

அபிவிருத்திதானே முக்கியம். அதற்காக ஆளுங்கட்சியை ஆதரிப்பதில் என்ன தவறு என்று ஐ. தே. கவும் அதன் அடிவருடிகளும் வினா எழுப்பி இருந்த சூழல் அது.

> 1981 மே 31 ஆம் திகதியன்று இரவு சிறிலங்கா அரசின் பொலிசாராலும் ஆளுங்கட்சிக்குச் சார்பான காடையர்களாலும் யாழ்ப்பாண பொதுநூல் நிலையம்; ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் உட்பட நகரின் முக்கிய பகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டும், வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது மானசம்பவங்கள் நிகழ்ந்தேறின. பண்பாட்டுப் படுகொலையின் சின்னமான அச்சம்பவம் பற்றிய நினைவாக:

இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரதானமான, பிரச்சினை, அவர்களது பாதுகாப்பும் அதற்கான உத்தரவாதமும் தான் என்பதை, முகத்தில் அறைந்தது போல் எடுத்துக்காட்டிய நிகழ்ச்சியாக யாழ்ப்பாண நூல் நிலையஎரிப்பு இடம்பெற்றது.

யார் இந்த நூல் நிலையத்தை எரித்தார்கள்?

காமினி திசாநாயக்காவும், லலித் அத்துலத் முதலியும் இன்னும் அவர்களது ஆதரவாளர்களும்இந்த நூல்நிலைய எரிப்புக்கு காரணகர்த்தாக்களாகவும், உடந்தையாகவும், இருந்தார்கள் என்று பத்து ஆண்டுகளுக்குப் பின்னர்- அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்ட பின்னர்- அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார்.

மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரசாரப் பணிக்கென அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர் குழாம் அப்போது யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு இருந்தது என்றும், தேர்தல் கடமைகளுக்கு என்ற போர்வையில்தென்னிலங்கையிலிருந்து காடையர்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்தனர் என்றும் பிரேமதாசா தமது குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை மேலும் சுட்டிக் காட்டினார்.

மிரட்டியும், விரட்டியும், உதைத்தும், மிதித்துத் துவைத்தும் தமிழ் மக்களைப் பணிய வைத்து விடலாம் என்று கனவு கண்ட சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தில் நெருப்பு மூட்டியது. ஓங்கி உயர்ந்த தீச்சுவாலைகளைக் கண்டு தமிழ் மக்கள் தொடை நடுங்கிப் போவார்கள் என்று கங்கணம் கட்டினர் அவர்கள். ஆனால், அந்தக் கனவுகளும், திட்டங்களும் இந்த மண்ணில் ஜெயித்து விடவில்லை. சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து புயற்பறவைகள் கிளம்பின.

காலம் நகர்ந்தது.

அரசின் பாதுகாப்புப் படைகளால் நாசமாக்கப்பட்ட அந்த நூல் நிலையத்தின் இடிபாடுகளும், அத்திவாரமும் கூட போருக்குத் துணையாயிற்று.

இடிபாடுகளுக்குள்ளிருந்தும், அத்திவாரக் கற்களோடு உறவு கொண்டும் கோட்டைக்குள் குடியிருந்த கொடியவரின் பாசறை நோக்கி எறிகணைகள் பறந்தன.

தன்னை நாசமாக்கிய பகைவர்களை நாசமாக்கிப் பழி வாங்கும் நோக்கில் நூல்நிலையத்தின் ஒவ்வொரு கற்களும் கூட மண்ணின் மைந்தர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிற்று.

எந்தக் கோட்டைக்குள் இருந்து புறப்பட்டு வந்தோரால் நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதோ. அவர்கள் இப்போது அங்கில்லை. ஆனால் எரியூண்ட நூல் நிலையக் கட்டடத்தின் எஞ்சிய பகுதிகள் இன்னும் அங்கே எதிர்கால சந்ததிகளுக்கு நினைவுச் சின்னமாய் நிமிர்ந்து நிற்கிறது.

-இளையவன்

# கறுப்பரின்கீழ்வாழ்வதைவிட போராடுவது மேலானது

## தென்னாபிரிக்க வெள்ளையர் அறிவிப்பு

(ஜோகானஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் கறுப்பு இனத்தவர் தலைமையிலான அரசாங்கத்தின்கீழ் வாழ்வதைவிட போராடுவதையே தாம் விரும்புவதாக வலதுசாரி வெள்ளையினத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

சுதந்திர இராஜ்ஜியம் ஒன்றுக்கான தமது கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் அரசாங்கக் கட்டடம் ஒன்றைநோக்கி ஊர்வலமாகச் சென்ற சுமார் மூவாயிரம் பேரைக் கொண்ட ஆயுதபாணிகளான இத் தீவிரவாதிகள் மேலும் கூறுகையில்; ஆபிரிக்க எழுச்சிஇயக்கத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படல் வேண்டும் என்றும்கோரினர். இவர்கள் காக்கிநிறச் சீருடையுடன் துப்பாக்கிகள் மற்றும் கைத் துப்பாக்கிகளுடன் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பொதுத்தேர்தலுக்காக சு. கட்சி தயாராகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அடுத்த தேர்தலுக்காக தன்னை இப்போது இருந்தே தயார் செய்ய ஆயத்தம் மேற்கொண்டுள்ளது. மாகாண சபை தேர்தலை தொடர்ந்து ஏற்பட்ட விழிப்பின் காரணத்தினால் தான் இப்போது இருந்தே தாம் ஆயத்தங்களை மேற்கொள்ளுவதாக சுதந்திரக்கட்சிப் பேச்சாளர்ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியை ஒழுங்குபடுத்தி, தேர்தல்களில் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளை கையாளுவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவே பண்டாரநாயக்காவினால் நேற்று முன்தினம் கமிஷன் ஒன்றை நியமித்து இருப்பதாகவும் அந்த கமிஷனின் தலைவராக அனுரத்த ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்செய்திகள்மேலும் தெரிவித்துள்ளன

## எல்லைக்கோடு தொடர்பாக

## சந்தைக்கு அருகே

இதனால் இராணுவ நடவடிக்கை இடம் பெறும் போது அன்றி குண்டுவீச்சுகள் இடம் பெறும் போது அவர்கள் ஓரளவிற்குப் பயத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறாக, பொருளாதாரத்தையும் இழந்து, இருப்பிடங்களையும் இழந்துள்ள மக்கள் வறுமையில் சிக்கிப் பெரும் துன்பங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக இம்மக்கள் ஒரு விதமான வேதனைக்கும் வருத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர் இதேவேளை இடம் பெயர்ந்து வறுமை போன்றவற்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மரணங்கள் சம்பவித்தும் உள்ளன.

ஆனால், இவையாவற்றையும் ஒன்றுதிரட்டி ஒட்டுமொத்தமாக மக்களின் மனோநிலை பெரியளவில் பாதிக்கப்பட்டு விட்டதென குறிப்பிடுவது எந்தளவிற்குப் பொருத்தப்பாடானதாகும்? மக்களின் பெரும் எண்ணிக்கையானோர் விரக்தியின் விளிம்பிற்குச் சென்று விடுவர் என்றும் தற்கொலை புரிந்துவிடக்கூடும் என்றும் குறிப்பிடுவது எந்தளவிற்கு யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவுள்ளது?

யுத்தமானது மக்களுக்கு துயரை ஊட்டுவதாகவும் விருப்பத்துடன் நடைபெறுவதாகவும் இல்லைத்தான். ஆனால், யுத்தகாலத்தில் மக்கள் அனைவரும் தமது சகல செயற்பாடுகளையும் நிறுத்தி யுத்தத்தை மட்டுமே எண்ணிக்கொண்டிருப்பதில்லை. யுத்த காலத்தில் தமதுவாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பது பற்றியே சிந்திக்கின்றனர், செயற்படுகின்றனர். அவ்வாறு செயற்படவில்லை என்றால்தான் யுத்தம் பற்றிய எண்ணத்தில் மனோநிலை பாதிக்கப்படுகின்றது அவ்வாறானவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. இதுவே உலகில் யுத்தம் நடந்த பூமிகளின் படிப்பினையாகவும் உள்ளது.

வியட்நாம் தனது விடுதலைக்காக சுமார் மூன்று நூற்றாண்டுகளாக போராடியது. அயர்லாந்து சுமார் ஏழு நூற்றாண்டுக்கு மேலாக நடத்துகின்றது. அண்மையில் விடுதலை பெற்ற எரித்திரியா முப்பது வருடங்களுக்கு மேல் பெரும் துயர்களுடன் யுத்தத்தை சந்தித்தது. பாலஸ்தீனமோ 45 வருடத்திற்கு மேலாக சியோனிச ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிறது. கம்போடியாவோ பல ஆண்டுகளாக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் இன்று சுமார் பத்து வருடங்களாக கூர்மை பெற்றுள்ள ஈழப்போர், மக்களின் மனோநிலை பெருமளவு பாதிக்கப்பட்டு அச்சம் ஊட்டும் நிலையை அடைந்துள்ளது என்பது எந்தளவிற்குச் சரி யானதும்பொருத்தமானதும் ஆகும்? சிலர் எச்சரிப்பது போல் இருக்குமானால் வியட்நாம், கம்போடியா, ஆப்கானிஸ்தான், எரித்திரியா ஆகிய நாடுகளில் உள்ள மக்களின் பெரும்பான்மையினர் இன்று பைத்தியகாரர்களாகவோ அன்றி மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவோ இருக்க வேண்டும் அல்லது அந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் தற்கொலை செய்திருக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை. நிகழப்போவதும் இல்லை. யுத்தம் மக்களைப் பாதிக்கின்றதுதான். ஆனால் இன்று எச்சரிக்கப்படும் அளவில் உள்ளதா என்றால் இல்லை என்றே கூறலாம். இதேவேளை மனோநிலை குறித்து வெளிவரும் மிகையான கணிப்புக்கள் மக்களை மேலும் மேலும் அச்சம் ஊட்டுமே ஒழியஅவர்களின் மனஉறுதியை வளர்த்து போர்ச் சூழலை எதிர்கொள்ளும் சமூகம் ஒன்றை உருவாக்க உதவப் போவதில்லை,

# கறுப்பரின்கீழ்வாழ்வதைவிட போராடுவது மேலானது

## தென்னாபிரிக்க வெள்ளையர் அறிவிப்பு

(ஜோகானஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் கறுப்பு இனத்தவர் தலைமையிலான அரசாங்கத்தின்கீழ் வாழ்வதை விட போராடுவதையே தாம் விரும்புவதாக வலதுசாரி வெள்ளையினத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

சுதந்திர இராஜ்ஜியம் ஒன்றுக்கான தமது கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் அரசாங்கக் கட்டடம் ஒன்றைநோக்கி ஊர்வலமாகச் சென்ற சுமார் மூவாயிரம் பேரைக் கொண்ட ஆயுதபாணிகளான இத் தீவிரவாதிகள் மேலும் கூறுகையில்; ஆபிரிக்க எழுச்சிஇயக்கத்திற்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படல் வேண்டும் என்றும்கோரினர். இவர்கள் காக்கிநிறச் சீருடையுடன் துப்பாக்கிகள் மற்றும் கைத் துப்பாக்கிகளுடன் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் தலைவரான கிறேபலான்சே மேலும்கூறுகையில் தமது சொந்த மண்ணிற்கு செல்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்காவிட்டால் யுத்தம் வெடிக்கும் என்றும் சூளுரைத்தார்.

# எல்லைக்கோடு தொடர்பாக ஈராக் அதிருப்தி

(நியூயோர்க்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையால் நியமிக்கப் பட்ட குழு ஒன்றினால் வரையறுக்கப்பட்ட ஈராக் - குவைத் நாடுகளுக்கிடையிலான எல்லைக் கோட்டிற்கு சபை ஏகமனதாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த எல்லைக் கோட்டை மதித்து நடக்குமாறு பாதுகாப்புச்சபை இரு நாடுகளையும் கேட்டுக்கொண்டுள்ளது. எனினும், ஈராக் அரசு இந்த எல்லைக் கோடு குறித்துத் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க நிர்வாகம் பாகிஸ்தான் பக்கமே

## வாஜ்பாய் குற்றச்சாட்டு

[டில்லி]

அமெரிக்க நிர்வாகம் பாகிஸ்தான் பக்கமே சாய்ந்திருப்பதாக பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் குற்றம்சாட்டியுள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய வாஜ்பாய் மேலும் கூறுகையில்; குறைவான ஆதாரங்களை வைத்துக்கொண்டே லிபியாவிற்கு எதிராக பொருளாதார தடைகளை விதித்திட அமெரிக்காவும் இதர மேற்கத்தைய நாடுகளும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில்நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

## ரமேஷ்முரே சுட்டுக்கொலை

(டில்லி)

மகராஷ்டிராவில் சிவசேனை மாநகரசபை உறுப்பினர் ரமேஷ் முரே நேற்று இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் நால்வரால் சுட்டுக்கொல்லப் பட்டார்,

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் காலமானார்,

வடமேற்கு பம்பாய் புறநகர்ப் பகுதியில் அவரது வீட்டுக்கு முன்பாக அவர் சுடப்பட்டார். பம்பாய் பொலிஸ் விசாரணை மேற்கொண்டுள்ளது,

# அரசியல் கட்சிகள் மதத்தை பயன்படுத்த தடை வரும்

## மத்திய அமைச்சர் பரத்வாஜ்

(டில்லி)

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அரசியல் கட்சிகள் மதத்தைப் பயன்படுத்துவதை தடுக்கும் மசோதா இந்தியப் பாராளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரின் போது சமர்ப்பிக்கப்படலாம் என்று மத்திய அரசின்சட்டம் மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் எச். ஆர். பரத்வாஜ் கூறியுள்ளார்.

லக்னோவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்: இந்த மசோதாவை தயாரிக்கும் பணி ஏற்கெனவே நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

சட்டம் மற்றும் நீதித்துறையில் கொண்டுவரப்பட இருக்கும் மாற்றங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில் இது சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்ற மாநில சட்ட அமைச்சர்களின் மாநாட்டிலும் இந்த சட்ட மூலம் பற்றி விவாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

# பொதுத்தேர்தலுக்காக சு. கட்சி தயாராகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அடுத்த தேர்தலுக்காக தன்னை இப்போது இருந்தே தயார் செய்ய ஆயத்தம் மேற்கொண்டுள்ளது. மாகாண சபை தேர்தலை தொடர்ந்து ஏற்பட்ட விழிப்பின் காரணத்தினால் தான் இப்போது இருந்தே தாம் ஆயத்தங்களை மேற்கொள்ளுவதாக சுதந்திரக்கட்சிப் பேச்சாளர்ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியை ஒழுங்குபடுத்தி, தேர்தல்களில் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளை கையாளுவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவே பண்டாரநாயக்காவினால் நேற்று முன்தினம் கமிஷன் ஒன்றை நியமித்து இருப்பதாகவும் அந்த கமிஷனின் தலைவராக அனுரத்த ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்செய்திகள்மேலும் தெரிவித்துள்ளன

# சந்தைக்கு அருகே மாடுகள் வெட்டப்படுகின்றன

(தென்மராட்சி)

கொடிகாமச் சந்தைக்கு அண்மையில் சனநடமாட்டம் மிகுந்த இடத்தில் இறைச்சிக் கடைக்காரர்கள் மாட்டினை ஒரு சிறிய - சீரில்லாத கொட்டகை ஒன்றினுள் வைத்துக் கொன்று இறைச்சியினை வெட்டிப் பிரிக்கின்றனர். இதேவேளை கொடிகாமச் சந்தையில் மீன் வியாபாரிகளும் பெரிய மீன்களைவெட்டி முள்ளுகளை கண்டபடி வீசுகின்றார்கள்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் இடம்பெறுவதால் அயலில் குடியிருப்போர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் வரும் எலும்புகள் முள்ளுகளை காகங்கள் கொண்டு சென்று கிணற்றுக்குள் போடுவதால் கிணற்று நீர் மாசுபடுத்தப்படுகின்றது. இப்படித் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் சுகாதாரமின்மை நிலவுவதாக தெரியவருகின்றது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் எடுத்துக் கூறியும் இதுவரை அவ்வதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (86)

கிருமிநாசினி மருந்தை

# மகளுக்குப் பருக்கிய தாய் தானும் அருந்தி தற்கொலை

[தென்மராட்சி]

தாய் தனது பிள்ளைக்கு கிருமிநாசினி மருந்தைப்பருக்கி தானும் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம்பற்றி கூறப்படுவதாவது; இயக்கச்சிப் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து மட்டுவில் வடக்கு சாவகச்சேரியில் வசித்து வந்த சிவசிதம்பரம் யோகேஸ்வரி (வயது 28) மகள் சிவசிதம்பரம் தர்சா (வயது 04) இருவருமே மரணமானவர்களாவர்.

நேற்றுக் காலை இப்பிள்ளையின் தாயார் பிள்ளைக்கும் கிருமிநாசினி மருந்தைப்பருக்கிவிட்டு தானும் குடித்து தற்கொலை செய்துள்ளார். தாய் அதே இடத்தில் மரணமான போதும் பிள்ளை மயக்கநிலையில் இருந்ததைக்கண்ட அயலவர்கள் உடன் பிள்ளையை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுவந்தனர். இப்பிள்ளையின் உயிருக்காக வைத்தியர்கள் போராடியும் அப்பிள்ளை பரிதாபமாக இறந்துள்ளது. [86]

## வீரவணக்கக் கூட்டம்

5ஆம் மாதங்களில் (மே மாதம்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தீவகக் கோட்டத்திற்குட்பட்ட பன்னிரண்டு மாவீரர்களுக்கான வீரவணக்கக்கூட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில் செல்வி சுகுணா. திரு. பைந்தமிழன், திரு. தேவர் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். இதனைத் தொடர்ந்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக தீவக உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (90)

ஈழநாதம்

# மேல் மாகாணசபை ஆட்சி; ஐ. தே. க. கவிழ்க்கும்?

## ஹெல உறுமய உதவலாம் என சந்தேகம்

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர் இடை இன்று பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. ஆகவே எதிர்க்கட்சியின் உறுப்பினர் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பார்கள் என்ற அச்சம் எதிர்க்கட்சிகளிடையே நிலவுகின்றது என பிரபல பத்திரிகையாளர் வினி எத்தி கொட பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியின் தலைமைப் பீடத்தில் பல கருத்துவேறுபாடுகள் நிலவுவதாகவும், சந்திரிக்கா குமாரணதுங்க அண்மையில் வெளியிட்ட கருத்துக்களைத் தொடர்ந்து கட்சியில் பழைய உறுப்பினர் சிலர் வெளியேறலாம் அல்லது வெளியேற்றப்படலாம் என்ற நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஹெல உறுமைய குழுவினருக்கு கட்சியில் முக்கிய பதவிகள் எதுவும் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் இன்மையினால் அவர்கள் தாமாகவே வெளியேறி ஆளும் கட்சியுடன் இணையலாம் என்றும் கூறினார்.

மேல் மாகாணத்தில் ஆட்சியை அமைத்த சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஐ. தே. க. கொண்டு வந்து ஹெல உறுமையா குழுவினர்களை தமக்கு சார்பாக வாக்களிக்கும்படி கூறி அவ்வாறுவாக்களிக்கும்சந்தர்ப்பத்தில் மேல் மாகாணத்தின் ஆட்சியை ஆளும் கட்சி அமைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவேதான் எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைத்திருக்கும் மேல் மாகாணத்திலும், ஆட்சி அமைக்கஎத்தனிக்கும் ஏனைய மாகாணங்களாக வட மேல் தென் மாகாணங்களின் தங்கள் உறுப்பினர் மீது எதிர்க்கட்சிகள் சந்தேகம் கொண்டு செயல்படுவதாகவும் தெரிவித்தார்.

### மாமண்டூர் கைதிகள் மீட்பு

# அ.தி.மு.கவின் குற்றச்சாட்டு அர்த்தமற்றதொன்று

## - கருணாநிதி

(சென்னை)

மாமண்டூர் அருகே அதிரடி நடவடிக்கை மூலம் தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழக காவல்துறையைச் சேர்ந்த ஆறுபேர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதால் இது தொடர்பாக மத்திய அரசு நிறுவனம் மீது தமிழக அமைச்சர் தெரிவித்த குற்றச்சாட்டு அர்த்தமற்றதாகியிருப்பதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து சென்னையில் வெளியிடப்பட்ட அறிக்கையில்; மேலும் அருணாசலம் கமிட்டி இச்சம்பவம் தொடர்பான விசாரணையை ஆரம்பிப்பதற்குமுன்பாகவே பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டமை ஒரு தலைப்பட்சமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கடமைக்கு சமூகமளிக்க ஆசிரியருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்ளோமா பட்டப்பின்படிப்பு கல்வி நெறிப் பரீட்சை பகுதி ஒன்று ஜுன் 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. படிப்பு லீவில் நின்ற ஆசிரிய மாணவர்கள் அனைவரும் வரும் 2ஆம்திகதிபுதன்கிழமை தங்கள் கடமைகளுக்குப் பாடசாலைகளுக்குச் சமூகமளிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும், கல்வி டிப்ளோமா பட்டப்பின்படிப்பு கல்வி நெறி 1992-93 கற்பித்தல் பயிற்சி வரும் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும். பயிற்சி ஆசிரிய மாணவர்கள் அனைவரும் தத்தம் நிலையங்களுக்குத் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஹொக்கி போட்டி

யாழ். றோட்டறி கழகத்தால் நடாத்தப்படும் 7 பேர் கொண்ட ஹொக்கி சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கிறீன் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து யங் கிறாஸ் கொப்பர் அணியும், இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக புளூஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணியும் மோதவுள்ளன. இறுதிப்போட்டி நாளை நடைபெறும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வேலணை கோட்ட பிரிவுக்குட்பட்ட சங்கீத ஆசிரியர்களின் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9-00 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெற உள்ளது. இதில் சகல சங்கீத ஆசிரியர்களும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது (88)

## ஆணைக்குழு கலைக்கப்படும்

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பாக ஆராய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு விரைவில் கலைக்கப்படலாம் என்று தெரியவருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சிங்கள

விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய கென்னத் பெர்னாண்டோவை அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்துக்கூடப் பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெற்றோர்கள் யாழ்ப்பாணம்

## பேச்சுவார்த்

வரமுடியவில்லை என்றும் பிரதமர் ரணில் அப்பேட்டியில் ஒப்புக்கொண்டார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த என்றும் கதவை திறந்துவைத்துள்ளது. புலிகள் தான் மீண்டும் மீண்டும் முன் நிபந்தனை விவகாரத்தை வலியுறுத்தி தெரிவுக்குழுவுடன் பேச்சு நடத்த வராமல் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா குறித்து அப்பேட்டியில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில், மாகாணசபை தேர்தலின் பின் ஜனாதிபதி பிரேமதாசா சில யோசனைகளை வெளியிட எண்ணியிருக்கலாம் என நாம் நினைத்தோம். அவரின் மனதிலிருந்த யோசனைகள் எவை என்பது எமக்கு தெரியாது. மாகாணசபை தேர்தலில் மக்களின் ஆணையை பெற்றபின் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு புதிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என இறுதியாக நடந்த ஐ தே.க. நிறைவேற்று குழு கூட்டத்தில் தெரிவித்தார். புதிய அரசு இப்போதுதான் பதவியில் அமர்ந்துள்ளது

## அமைதி

மதியான ஒரு வாழ்க்கையை வாழவே விரும்புகிறார்கள். இப்புதிய அரசு அதற்கேற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே மக்களின் நியாயபூர்வமான இவ் அபிலாசைகளை அரசு கவனத்தில் கொண்டு செயல்படும் என தான் கருதுவதாகவும் ஆயர் இச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார்

## தேசிய

பொருத்தமான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள்வதால் இலங்கையின் சனத்தொகையை அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்

## ஹெலி

உலங்கு வானூர் உணவுப் பொதி படவுள்ளதாக திணைக்களம் அ ளது.

நாகொட, பகுதிகளுக்கு த தொடர்பு வெள் டிக்கப்பட்ட உலங்கு வானூ க்கு அழை இதே சமயம் தில் 25 ஆயி வீடு இழந்து



## தமிழீழ காவல்துறையினரின் சேவைக்குப் பாராட்டு

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கடந்த ஐந்து வருட காலமாக தர்மகர்த்தா சபை என யாப்பு எதுவும் இன்றி தன்னிச்சையாக இயங்கி வந்த ஒரு குழுவினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி முறையான ஒரு நிர்வாகத்தை அமைப்பதற்கு ஏதுவாக 24-05-1993 அன்று ஓர் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தித் தந்தமைக்காக தமிழீழக் காவல் துறையினருக்கு கொக்குவில் மேற்கு வாழ் மக்களும் ஆலய நலன் விரும்பிகளும் தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். [5004]

சாவகச்சேரி

தெய்வேந்திரா திரை





An Announceme

Samuel Sons & Co.

We regret to announce the death of M
Samuel Chairman/Managing Director
Co Ltd. on 29 5-1993 in Colombo. As a
our establishmeut at 208, Hospital Road, Jaffn
Chemmani Road, Nallur will be closed on

Jaffna Ma

## அறிவித்தல்

சாமுவேல் அன் சன் கொம்பனி லிமிட்

எங்களது தலைவரும், நிர்வாக இயக்கு திரு. பீற்றர் சாமுவேல் 29-5-93 அன்று காலமாகிவிட்டார் என்பதை மிகவும் ம துடன் அறியத்தருகின்றோம். அன்னாருக்கு செலுத்தும் முகமாக இன்று 31-5-93 திங் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும், நல்லூர் செம் யிலுமுள்ள எமது ஸ்தாபனங்கள் மூடப்ப என்பதையும் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம். முகாமை ர்.

(சி-6722)

## மரண அறிவித்தல்கள்

திரு. சின்னத்தம்பி விஜயபாலசிங்கம்

(இளைப்பாறிய பிரதான ஒப்புநோக்குனர், கல்வித்திணைக்களம் கொழும்பு)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மானிப்பாயில் வசித்துவருபவருமாகிய திரு சின்னத்தம்பி விஜயபாலசிங்கம் 30-05-1993 நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்ன டி தம்பதியினரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், தேவாமிர்தத்தின் அன்புக் கணவரும், தெய்வரதி (தட்டெழுத்தாளர், லங்கா சிமெந்து நிறுவனம்) Dr. கலாரதி (உதவி வைத்திய அதிகாரி, புதுக்குடியிருப்பு), குமரன் (பாதுகாவலர், காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம்),

## காவல்துறையினரின் சேவைக்குப் பாராட்டு

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கடந்த ஐந்து வருட காலமாக தர்மகர்த்தா சபை என யாப்பு எதுவும் இன்றி தன்னிச்சையாக இயங்கி வந்த ஒரு குழுவினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி முறையான ஒரு நிர்வாகத்தை அமைப்பதற்கு ஏதுவாக 24-05-1993 அன்று ஓர் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தித் தந்தமைக்காக தமிழீழக் காவல் துறையினருக்கு கொக்குவில் மேற்கு வாழ் மக்களும் ஆலய நலன் விரும்பிகளும் தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். [5004]


சாவகச்சேரி

# தெய்வேந்திரா திரை அரங்கில்

1-6-1993 செவ்வாய்க்கிழமை முதல்
முல்லை மாவட்டக் கலைஞர்களின்

## முதலாவது வெற்றிப்படைப்பு
# "தமிழோசை"

தினசரி மாலை 4 மணி 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

(சி/6720)


கலைக்கப்படும்

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பாக ஆராய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு விரைவில் கலைக்கப்படலாம் என்று தெரியவருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### சிங்கள

விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய கென்னத் பெர்னாண்டோவை அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்துக்கூடப் பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெற்றோர்கள் யாழ்ப்பாணம் வந்து அவர்களைப் பார்வையிட விடுதலைப்புலிகள் அனுமதி அளித்திருந்தபோதும் அரசாங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் வர அனுமதி மறுத்திருந்தது தெரிந்ததே.

இந்நிலையிலே அரசாங்கத்தின் போக்கை கண்டித்து புலிகளின் பாதுகாப்பிலுள்ள பொலிஸாரும், சிப்பாயும் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

### லலித்

தைச் சேர்ந்த புலனாய்வாளர்கள் அடுத்த சில தினங்களில் முக்கிய திருப்பங்கள் ஏற்படலாம்என்று நம்பிக்கை கொண்டுள்ளனராம்.

யுறுத்தி தெரிவுக்குழுவுடன் பேச்சு நடத்த ெராமல் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா குறித்து அப்பேட்டியில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில், மாகாணசபை தேர்தலின் பின் ஜனாதிபதி பிரேமதாசா சில யோசனைகளை வெளியிட எண்ணியிருக்கலாம் என நாம் நினைத்தோம். அவரின் மனதிலிருந்த யோசனைகள் எவை என்பது எமக்கு தெரியாது. மாகாணசபை தேர்தலில் மக்களின் ஆணையை பெற்றபின் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு புதிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என இறுதியாக நடந்த ஐ.தே.க. நிறைவேற்று குழு கூட்டத்தில் தெரிவித்தார். புதிய அரசு இப்போதுதான் பதவியில் அமர்ந்துள்ளது நிலைமைகளை வசப்படுத்திக் கொண்டு முயற்சிகளை தொடருவோம் என அப்பேட்டியில் குறிப்பிட்டார்.

### ஆளும்

வைக்கவேண்டுமென்றும் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் ஜனாதிபதியிடமும், கட்சி உயர் பீடத்தினரிடமும் வலியுறுத்திக் கோரியிருப்பதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது எனவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### ரெலோ

பஸ்ஸில் வந்த ரெலோகுழுவினர்க்கும் இடையில் தகராறு ஏற்பட்டு முற்றிய நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் ரெலோ குழுவின் உறுப்பினர் ஒருவரை தாக்கினார்.

இச்சம்பவத்தையடுத்து மன்னார் நகரில் கடமையிலிருந்த இரு பொலிசாரை ரெலோ குழுவினர் பிடித்து தமது முகாமிற்கு கொண்டு சென்றனர். இதனால் மன்னாரில் பொலிசாருக்கும் ரெலோகுழுவினர்க்கும் இடையில் மோதல் வெடிக்கும் நிலையில்இப் பகுதிக்கு இராணுவம் விரைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைக்களத்தனிக்கும் ஏனைய மாகாணங்களாக வடமேல் தென் மாகாணங்களின் தங்கள்

### அமைதி

மதியான ஒரு வாழ்க்கையை வாழவே விரும்புகிறார்கள். இப்புதிய அரசு அதற்கேற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே மக்களின் நியாயபூர்வமான இவ் அபிலாசைகளை அரசு கவனத்தில் கொண்டு செயல்படும் என தான் கருதுவதாகவும் ஆயர் இச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார்

### தேசிய

பொருத்தமான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள்வதால் இலங்கையின் சனத்தொகையை அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு கோடியே ஐம்பது லட்சத்திற்கு மட்டுப்படுத்த முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

### மாகாண

கட்சியிடையே மாகாணசபை ஆட்சி இருந்தமையால் இது தொடர்பாக உள்ள அதிகாரங்கள் பற்றி உணர முடியாமல் இருந்தது. என்றார்.

### இராணுவ

முள்ளியான், பலாலி ஆகிய இடங்களில் இயங்கிவந்த அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் ஊர்காவற்றுறை பிராந்திய சுகாதார வைத்திய நிலையம்ஆகியனவேமூடப்பட்டுள்ளன.

அளவெட்டி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைகள் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களில் இயங்கிவருவதாகவும், நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவுப் பகுதிகளில் இயங்கிய வைத்தியசாலைகளுடன் எதுவித தொடர்புகளும் இல்லாதிருப்பதாகவும் இவை இயங்குகின்றனவா அல்லது மூடப்பட்டுள்ளதா என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.


ஓம் விராம் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் ஸ்ரீமுக வருசம் வைகாசி மாதம் 20ஆம் திகதி (2-6-93) புதன்கிழமை 5 52 முதல் 6 58 வரையும் வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| முருகையா பத்தர் அவர்களின் | அமரர் சந்திரன் அவர்களின் |
| சிரேஷ்ட புத்திரன் | செல்வப் புதல்வி |
| **சுரேஸ்குமார்** | **ஜெயராணி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர், நண்பர்கள் குடும்ப சமேதரராய் சமுகம்தந்து மணமக்களை வாழ்த்தும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு திருமதி முருகையா[பத்தர்]குடும்பத்தினர்
70/1 கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

பூபால்பத்தர் பாக்கியராஜா[ரவி]தம்பதிகள்
தாய்மாமன்
திரு. திருமதி ஜெயச்சந்திரன் குடும்பத்தினர்
[ராஜீ] சகோதரன்
59,பூனாறி லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மணமகன் இல்லத்தில் அன்று பி.ப. 4.00 மணிக்கு
வரவேற்பு நடைபெறும்

[சி-6724]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 30-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9612

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3726, 26-7252, 26-3628, 24-9856, 24-2493, 26-6796. 26-4429, 24-8391, 42-3368, 42-9112, 28-3306, 24-5140, 24-3262, 26-6335

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-5058, 22-6468, 27-5482, 26-0535, 28-1019, 28-2385, 42-2157, 28-0159, 24-4282, 26-4809, 42-7312, 26 4139, 43-0916, 28-4672

யாழ்ப்பாணம். முகாமை...
(சி-6722)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சின்னத்தம்பி விஜயபாலசிங்கம்

(இளைப்பாறிய பிரதான ஒப்புநோக்குனர், கல்வித்திணைக்களம் கொழும்பு)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மானிப்பாயில் வசித்துவருபவருமாகிய திரு சின்னத்தம்பி விஜயபாலசிங்கம் 30-05-1993 நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும, தேவாமிர்தத்தின் அன்புக் கணவரும், தெய்வரதி (தட்டெழுத்தாளர், லங்கா சிமெந்து நிறுவனம்) Dr. கலாரதி (உதவி வைத்திய அதிகாரி, புதுக்குடியிருப்பு), குமரன் (பாதுகாவலர், காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம்), சுகுணரதி, செந்தில் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கத்தின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம், சுமதி(U.K) ஆகியோரின் அன்... சகோதரனும், சண்முகசுந்தரம், சிவராசா (அதிபர்) ஜெயரத்தினம், சிவபாக்கியம், பரமேஸ்வரியம்மா, ஜெபராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோகில வதனி, ச... ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ... கிரியைகள் 30-05-1993 நேற்று மானிப்பாயில் நடைபெற்றது என்பதை உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(5009)

தகவல்:
மனைவி

### வைத்திலிங்கம் பாலசுந்தரம் (ஐயா...

(முன்னாள் இ.போ.ச. சாரதி, கோண்டாவி...
(வைத்திலிங்கம் றான்ஸ்போர்ட் உரிமையாள...

நவக்கிரியை பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலி... பாலசுந்தரம் [ஐயா] [முன்னாள் இ.போ.ச சாரதி கோ...டாவில்], [வைத்திலிங்கம் றான்ஸ்போர்ட் உரிமையா... அன்னார் 30-05-1993 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அ...ந்து விட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் ப...யம் தம்பதிகளின சிரேஷ்ட புதல்வரும் ,அன்னலட்சுமி... அன்புக் கணவரும், சாந்தினி [ஆசிரியை ஆவரங்கால் ...ஜன வித்தியாசாலை]. திருமகள் மதனபாலன் [சுவி... கலைமகள் [மாணவி ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி புத்... ஆகியோரின் அன்புத்தந்தையும்,நவரத்தினம் [சிவா ... உழவு இயந்திர உரிமையாளர்], காலஞ்சென்ற தவப... குண்டுமணி, நீலமணி, ஞானலிங்கம் [சுவிஸ்], இரத்... சிங்கம் [சுவிஸ்] ஆகியோரின் அன்புச்சகோதரரும், இ... மணி [இளைப்பாறிய சிறுவர் நல்நடத்தை பரிபா... இலாகா], தியாகராசா [இளைப்பாறிய பொலிஸ் உ...யோகத்தர்], இராசதுரை [காசாளர் ப.நோ. கூ.ச. ...வேலி], ஸ்ரீரங்கநாதன் [இளைப்பாறிய லிகிதர் நீர்ப்...சன சபை], கமலாதேவி, மகேஸ்வரி [சுவிஸ்] ஆகியோர... அன்பு மைத்துனரும் ஆவர் அன்னாரின் இறுதிக்கிரி... 31-05-93 திங்கட்கிழமை (இன்று) காலை 9மணிக்கு அ...னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூ...வுடல் தோப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இ... அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்று... கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்

இராச வீதி,
தோப்பு,
அச்சுவேலி.
(5008)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ஆம் ஆ... மே மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.